**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 486 /2024**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிமுத்து | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணசாமி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | சம்சிகாபுரம் | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 06.05.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சம்சிகாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். 13.09.2023ம் தேதி மாலை 3.00 மணியளவில் நானும், எனது நண்பர் முருகப்பா என்பவரும் பருவக்குடி பஸ்ஸ்டாப் பக்கம் நின்றுக்கொண்டிருந்தோம். அங்கு வைத்து எதிரிகள் 3 பேரையும் போலீசார் கைது செய்தார்கள். எதிரிகளை தெரியும். எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் முதலாவதாக நிற்கும் நபர் போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். (எதிரி ரமேஷ் ) எதிரி ஒரு நபரை கத்தி, அருவாள் வைத்து வெட்டியதாகவும், அதனை மாங்குடி குளத்து பக்கம் மறைத்து வைத்திருப்பதாகவும் அதை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.3 ஆகும். பின்னர் மாலை 5.00 மணியளவில் மாங்குடி குளத்து பக்கம் அருகில் இருந்து ஒரு அருவாளையும், ஒரு கத்தியையும் எடுத்து

ஆஜர் செய்தார். அதனை போலீசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி அசாஆ.4 ஆகும். போலீசார்கள் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

பருவக்குடி விலக்கிற்கும் சம்சிகாபுரத்திற்கும் இடையே 8 கி.மீ தூரம் இருக்கும். நான் ராஜபாளையத்தில் இருந்து அந்த இடத்திற்கு வந்தேன். நான் பைக்கில் வந்தேன். நாங்கள் வரும்போதே எதிரிகளை போலீசார் பிடித்து வைத்திருந்தார்களா என்றால் நாங்கள் வரும்போது அங்கு கூட்டமாக இருந்தது . எதிரிகளும் நின்றார்கள். ஆய்வாளர் எங்களிடம்தான் சாட்சி கையொப்பம் பெற்றார். எதிரிகளில் யார்யாருக்கு காயம் இருந்தது என்றால் யாருக்கும் காயம் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு போலிஸ்காரர் எழுதினார். நான் பருவக்குடி விலக்கிற்கு செல்லவில்லை என்றாலும், என் முன்னிலையில் வைத்து எதிரி ரமேஷ் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அவர் எந்த பொருளையும் ஆஜர் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அதனால்தான் எதிரி ரமேஷ் மற்றும் நாகராஜன் ஆகியோர்களுக்கு ஏற்பட்டிருந்த காயங்களை என்னால் குறிப்பிட்டு கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. போலீசாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 12:54:33 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 486 /2024**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஜெயராஜ் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | மாங்குடி | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 06.05.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் மாங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். 13.09.2023ம் தேதி காலை 8.00 மணிக்கு நான் வியாபரத்திற்கு புறப்படும்போது மாங்குடி ஊரில் உள்ள ஜெயகுமார் வீட்டின் பக்கம் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார்கள். நானும், பென்னிஸ் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அசாஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

என்னுடைய வீட்டு தெருவில் அசா.1ன் ஜெயக்குமார் வீடு உள்ளது என்றால் சரிதான். ஜெயக்குமார் வீட்டில் இருந்து யாரெல்லாம் போலீசார் வந்தபோது இருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. ஜெயக்குமாரும் நானும்

உறவினர் இல்லை. நான் ஜெயக்குமாருக்கு ஆதரவாக காவல் நிலையத்தில் வைத்து தயாரித்த பார்வை மகஜரில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 12:54:40 +0530